**தலைப்பு 276 - பதுளை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன பதுளை மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 276 – பதுளை மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 05 ஆம் திகதி மாவட்டச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பதுளை மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும்/ அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | பூரணப்படுத்தப்படாத செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் | 2.2 |
| | | 2. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை | 2.3.1 |
| | | 3. | பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்படாமை | 2.4(அ) |
| | | 4. | மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை | 2.7.1 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | 1. | பொது வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை | 2.9(அ) மற்றும் (ஆ) |
| | | 2. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | 2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், | 1. | அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படாமை | 2.5(அ) |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை | 2. சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை | 2.5(ஆ) |
| | | 3. விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் | 2.5(இ) |
| | | 4. முறையாக வெளித்தரப்பினர்களிற்கு சொத்துக்கள் கையளிக்கப்படாமை | 2.5(ஈ) |
| | | 5. வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபைகளின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை | 2.5(உ) |
| | | 6. வாகன விபத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதிலுள்ள குறைபாடுகள் | 2.6 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் வேண்டப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள், அறிக்கைகள் என்பவற்றை உரிய காலத்தில் சமர்ப்பித்தல் | 1. பெறுகைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை | 2.4(ஆ) |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.8 |
| 128(1)(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 1. பிரதான தொழிற்பாடுகளுக்கு முரணான நடவடிக்கைகள் | 2.3.2 |
| | | 2. செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல் | 2.3.3 |
| | | 3. செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள் | 2.3.4 |

| | | |
|---|---|---|
| 4. | பெறுகை நடவடிக்கைகளிலுள்ள குறைபாடுகள் | 2.4 |
| 5. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தும் போதான பற்றாக்குறைகள் | 2.7(அ) தொடக்கம் (கே) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள இணைந்த நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் கருமமாற்றுதல்.

(ஆ) அரசாங்கத்தின் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினைப் பேணிச்சென்று ஒப்படைக்கப்படும் கருமங்களை நிறைவேற்றுதல்.

(இ) அரசாங்கத்தினாலும் மாகாண சபையாலும் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்கான வருமானத்தினைச் சேகரித்தல்

(ஈ) மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களை ஒருங்கிணைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நிர்வாகம் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(உ) மாகாண சபைகளுக்குரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

(ஊ) தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

(எ) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டம் அடங்கலாக அரசாங்க அமைசுக்கள் மற்றும் திணைக்களங்களால் ஒப்படைக்கப்படும் ஏற்பாடுகளின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

(ஏ) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அடங்கலாக பல்வேறு விடயங்களிற்காக ஒருங்கிணைப்புக் கூட்டத்தை நடாத்துதல் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளை பேணிச்செல்லல்.

(ஐ) மாவட்டத்தின் சகல அரசாங்க, மதரீதியான மற்றும் கலாச்சார வைபவங்களை ஏறப்ாடு செய்தல்.

(ஒ) சிவில் அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூகம் மற்றும் அரசாங்க நிறுவனங்களிற்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக பங்களித்தல் மற்றும் பொதுச் சமூக விடயங்களை தீர்ப்பதற்காக நடுநிலைமையுடன் செயற்படுதல்.

### 2.2 திட்டமிடல்

மீளாய்வாண்டிற்காக பதுளை மாவட்ட செயலகத்தால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்கான வருடாந்த பெறுகை திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

### 2.3.1 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தால் 11 பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அதில் 9 செயற்பாடுகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன. ஹாலிஎல மற்றும் மஹியங்கனை பிரதேச செயலகக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 82 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 102 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச் செயற்பாடுகளிற்காக சாத்தியவளக் கற்கையை பூர்த்தி செய்தல் மற்றும் பெறுகைகளிற்குரிய ஆரம்ப கட்டங்களை அமுல்ப்படுத்துதல் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. பிரேரிக்கப்பட்ட கால வரையறையினுள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததனால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 37.5 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 64.5 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.3.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

தியதலாவ தாஜ் கூட்டுறவுச் சங்க கட்டிடத்தின் மலசலகூட முறைமையை அமைப்பதற்காக ரூபா 199,370 பெறுமதியான மூலப்பொருள் உதவி வழங்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்குச் சொந்தமான காணி வணிக நோக்கங்களிற்காக குத்தகை அடிப்படையில் தனியார் தரப்பினரால் பெறப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2018 மார்ச் 22 வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

மாவட்டச் செயலகத்தினால் மீளாய்வாண்டின் போது 6 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 6.37 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த 04 செயற்திட்டங்களிற்கான அங்கீகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழங்கப்பட்டிருக்காத போதிலும் ஒரு செயற்திட்டம் மழை காலத்தில் மண்சரிவு இடர்களைக் கொண்டிருந்ததெனவும் ஏனைய செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்குப் போதியளவு காலம் காணப்படவில்லையெனவும் குறிப்பிடப்பட்டு அந்த 06 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

### 2.3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

மாவட்ட செயலகத்தால் 07 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 2.72 மில்லியன் நிதியேற்பாடுகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது மூலப்பொருட்களை வழங்குவதில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் தாமதம் காரணமாக செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு 1 மாதம் முதல் 4 மாதங்கள் வரையான காலவீச்சுத் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன.

## 2.4 பெறுகைகள்

### 2.4.1 பெறுகைகளைத் திட்டமிடுதல்

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகள் ஊடாக வழங்கல்களையும் சேவைகளையும் நிறைவேற்றுவதற்காக ரூபா 135.34 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 67.06 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டிற்காக பதுளை மாவட்டச் செயலகம் மற்றும் பஸ்ஸர, கந்தகெடிய, பதுளை, வெலிமட போன்ற பிரதேச செயலகங்களால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது கட்டிடங்கள் திணைக்களத்தால் மஹியங்கணை பிரதேச செயலக புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 220.90 மில்லியன் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்குரிய பெறுகைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல்

மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்பட்டிருந்த பெறுகைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹியங்கணை பிரதேச செயலக புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான காணியை விசேடமாக இனங்கண்டு அச் செயற்பாட்டை பூர்த்திசெய்யாமல் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு புதினப் பத்திரிகை விளம்பரத்தினூடாக கேள்வி கோரி ஒப்பந்ததாரரை தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) எல்ல, பஸ்ஸர, பதுளை மற்றும் வெலிமட பிரதேச செயலகங்களினால் ரூபா 4.79 மில்லியன் கூட்டுமொத்தமான 78 பெறுகைகள் தொடர்பாக பூர்த்தி செய்யப்படாத குறிப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பொறுப்புக் காலப்பகுதி விசேடமாக குறிப்பிடப்படாமல் கேள்வி கோரப்பட்டிருந்தது. ஆகையால், விலைமனுதாரர்களால் தீர்மானிக்கப்பட்ட குறிப்புரைகள் மற்றும் பொறுப்புக் காலப்பகுதியை அடிப்படையாகக்கொண்டு பெறுகைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

(இ) எல்ல மற்றும் பஸ்ஸர பிரதேச செயலகங்களினால் ரூபா 3.45 மில்லியன் கூட்டுமொத்தமான 48 பெறுகைகளிற்காக கோரப்பட்ட கேள்வி ஆவணங்களில் பெறுமதி சேர் வரி தனித்தனியாக குறிப்பிட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்படாமல் கேள்வி கோரல் ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) பஸ்ஸர பிரதேச செயலகத்தால் கேள்வி கோரல் ஆவணங்களில் கோரப்பட்ட விலைகளின் செல்லுபடியாகும் காலம் விசேடமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால், செயலகத்தின் ரூபா 80,425 தொகையான பெறுகை தொடர்பாக ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களில் குறிப்பிடப்பட்ட விலைகளில் பொருட்களை வழங்க முடியாதிருந்ததென அறிவித்து பொருள் வழங்கல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

### 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

**(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவு வினைத்திறனுடன் பயன்படுத்தாமை**

கந்தகெடிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான பொகன்னொருவ, கந்தகெடிய மற்றும் தடில்ல கிராம உத்தியோகத்தர் விடுதிகள் அனைத்தும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன.

**(ஆ) சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

எல்ல பிரதேச செயலக பகுதியின் பல்லேபேறுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் 20 பேர்ச்கள் பரப்பளவான காணியில் அமைந்துள்ள 644 சதுர அடி பரப்பளவிலான பல்லேபேறுவ கிராம உத்தியோகத்தர் விடுதிகளில் 1999 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு உத்தியோகத்தரும் குடியிருக்கவில்லை. இதன் காரணமாக அவ் அரச விடுதிகள் மற்றும் காணி பற்றைகள் வளர்ந்து சிதைவடைந்திருந்தன. அந்த இடப்பகுதி வெளித் தரப்பினரால் அதிகாரமில்லாது சுவீகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டு இருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பிரதேச செயலகம் | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்றிருந்த காலம் |
|---|---|---|---|
| மீகஹகிவுல | காணி (ஹெக்டெயர்) கட்டிடம் | 01 | 01 ஆண்டு |
| | வாகனங்கள் | 02 | 09 ஆண்டுகள் |
| பண்டாரவெல | றோணியோ இயந்திரம் | 01 | 02 ஆண்டுகள் |
| | றிசோ (Rissograph) இயந்திரம் | 01 | 02 ஆண்டுகள் |

(ii) எல்ல நகரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டத்தில் ரூபா 1.08 மில்லியன் பெறுமதியான சீசீரீவீ கமரா முறைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய 29 பொருள் விடயங்களை பராமரிக்கும் நடவடிக்கைகள் எல்ல பொலிஸ் நிலையத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எல்ல பொலிஸ் நிலையத்தினால் உரிய முறைமை மற்றும் துணைக் கருவிகள் முறையாக கையேற்கப்பட்டிருந்ததென்பதற்கான எமுத்துமூல சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 02 கமராக்கள் பற்றாக்குறையாக காணப்பட்டமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்தை திட்டமிடும் போது வலையமைப்பு வசதிகளிற்கான சிட்டைகள் தீர்ப்பனவு செய்யப்படும் முறையை தீர்மானிக்காமல் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டமையால் அக் கமரா முறைமை செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

**(ஈ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் விதாதா வள நிலையத்தை நடாத்துவதற்காக 2009 மே 27 முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை கையளிக்கப்பட்டிருந்தது. அக் காணி மற்றும் கட்டிடங்கள் முறையாக கையளிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(உ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

ஹாலிஎல பிரதேச செயலகத்தில் 2016 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வுகளின் அறிக்கைகளின் பிரகாரம் திருத்தப்பட வேண்டியிருந்த 35 இரும்புக் கதிரைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திருத்தம் செய்யப்படாமல் பிரதேச செயலக வளாகத்தில் பாதுகாப்பற்றுக் காணப்பட்டன.

## 2.6 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பிஎவ் 437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களின் மோட்டார் வாகனங்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திடம் அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் காப்புறுதி செய்யப்பட வேண்டியிருந்தது. எல்ல மற்றும் பஸ்ஸர பிரதேச செயலகங்களிற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் காப்புறுதிப் பூட்கைகளைப் பெற்றுக்கொள்ளாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2010 ஆகஸ்ட் 25 ஆம் திகதி ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனமொன்றின் விபத்து தொடர்பான நட்டம் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் அது தொடர்பான விபரம் நட்டங்கள் தொடர்பான அறிக்கை மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு என்பவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான வாகனங்கள் 7 ஆண்டுகள் தொடக்கம் 19 ஆண்டுகள் வரையான காலவீச்சினுள் 6 சந்தர்ப்பங்களின் போது விபத்துக்குள்ளாகி ரூபா 8.04 மில்லியன் கூட்டுமொத்தமான நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும், மஹியங்கணை பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தின் வீட்டுத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களிற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 35,002 நட்டம், நட்டம் ஏற்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொறுப்பாகவுள்ள நபர்களை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்

### 2.7.1 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 462.96 | 461.77 | 1.79 | 0.39 |
| | மூலதனம் | 69.85 | 56.10 | 13.75 | 19.69 |
| | **மொத்தம்** | **532.81** | **517.27** | **15.54** | **2.92** |
| 2014 | மீண்டுவருபவை | 486.07 | 475.98 | 10.09 | 2.08 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதனம் | 257.75 | 128.10 | 129.65 | 50.30 |
| | **மொத்தம்** | **743.82** | **604.08** | **139.74** | **18.79** |
| 2015 | மீண்டுவருபவை | 617.55 | 612.98 | 4.57 | 0.74 |
| | மூலதனம் | 118.00 | 97.77 | 20.23 | 17.14 |
| | **மொத்தம்** | **735.55** | **710.76** | **24.79** | **3.37** |
| 2016 | மீண்டுவருபவை | 659.40 | 653.08 | 6.32 | 0.96 |
| | மூலதனம் | 125.00 | 61.39 | 63.61 | 50.89 |
| | **மொத்தம்** | **784.40** | **714.47** | **69.93** | **8.92** |
| 2017 | மீண்டுவருபவை | 659.13 | 655.42 | 3.71 | 0.56 |
| | மூலதனம் | 150.00 | 81.04 | 68.96 | 45.97 |
| | **மொத்தம்** | **809.13** | **736.45** | **72.68** | **8.98** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை**

2017 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின மூலம் மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 13.45 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் எந்தவொரு நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்காததனால் அவ் மொத்த தேறிய நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.7.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்.

26 அமைச்சுக்கள் மற்றும் 20 திணைக்களங்கள் என்பவற்றால் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 2,756.37 மில்லியன் மற்றும் ரூபா 186.54 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 2,942.91 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 2,450.42 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 477.08 மில்லியன் அல்லது 16.21 சதவீதமான நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து ஹபுதலே பிரதேச செயலகத்தினால் தம்பேதென்ன மருத்துவ நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இவ் நிர்மாணத்திற்காக 2 சந்தர்ப்பங்களின் போது அத்திவாரம் அமைத்தல் மற்றும் மேலதிக வேலைகளிற்காக ரூபா 429,505 தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலவிடப்பட்டு நிறைவேற்றப்பட்ட வேலையிலிருந்து எவ்வித பயனும் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு பயனற்றிருந்த செலவினத்திற்கு பொறுப்பாகவுள்ள தரப்பினர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து ஹபுதலே பிரதேச செயலகத்தினால் ரூபா 976,105 கூட்டுமொத்தமான 02 செயற்திட்டங்கள் 2017 ஆகஸ்ட் 17 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம், அச் செயற்திட்டங்கள் 2017 செப்தெம்பர் 06 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2017 திசெம்பர் 07 வரையிலும் அச் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டத்தை

நிறைவேற்றுவதற்குக் கையேற்ற ஒப்பந்ததாரர்களால் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை நிறைவேற்றப்படாதமை தொடர்பில் பிரதேச செயலகத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து வெலிமட மற்றும் பஸ்ஸர பிரதேச செயலகங்களினால் 06 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களில் வளைவுகள் எடுக்கும் வேலைக்காக குறித்துரைக்கப்பட்ட விலைவீதத்தை விடக் கூடுதலான விலைவீதம் பிரயோகிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 63,904 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து சொரணாதொட பிரதேச செயலகத்தினால் துருபுர தொடக்கம் கோவில் வரையான வீதியை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்திற்காக பொருட்கள் போக்குவரத்துச் செய்யக்கூடிய நுழைவுப் பாதை காணப்பட்ட போதிலும் செயற்திட்டப் வேலைத்தளத்திற்கு நிர்மாண மூலப்பொருட்களை எடுத்து வருவதற்காக ரூபா 19,668 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து சொரணாதொட பிரதேச செயலகத்தினால் 2 நிர்மாணச் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களிற்கு தேவையான ஹியூம் குழாய்களை (Hume pipes) செயற்திட்ட வேலைத்தளத்திற்கு 15 கிலோமீற்றர்கள் தொடக்கம் 20 கிலோமீற்றர்கள் வரையான வீச்சிலான தூர அளவிலிருந்து வழங்கக் கூடிதாக இருந்த போதிலும் 73 கிலோமீற்றர் தூரத்திலிருந்து எடுத்து வரப்பட்டதாக குறிப்பிட்டு ரூபா 5,999 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தி பஸ்ஸர பிரதேச செயலகத்தினால் 5 நிர்மாணச் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களில் 1:2:4 (மி.மி. 19) கொங்கிறீட் கலவையில் வீதியை கொங்கிறீட் இடுவதற்காக பெறுமதி சேர் வரியின்றிய விலைவீதம் பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. பின்னர் பெறுமதி சேர் வரி உள்ளடக்கப்பட்டு மதிப்பீட்டை திருத்தம் செய்த போது மூல மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட போக்குவரத்துக் கிரயம் அதிகரித்துக் காணப்பட்டது. இதனால் பிரதேச செயலகத்தினால் 5 செயற்திட்டங்களிற்காக ரூபா 63,147 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(எ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தி கந்தகெடிய பிரதேச செயலகத்தினால் வீதி நிர்மாணிப்புச் செயற்திட்டமொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் மரங்களை வெட்டும் வேலைக்காக (EL-027) பிரதேச செயலகத்தால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீண்டும் அவ் வீதிப் பிரிவுகளின் புதர்களை அகற்றுவதற்காக (MS 1–022) ரூபா 10,800 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் வீதிப் பிரிவின் மண் வெட்டும் வேலையை மேற்கொள்ளும் போது புதர்கள் அகற்றப்பட்டமையால் அதற்காக ரூபா 10,800 செலுத்தப்பட்டிருந்தமை மேலதிகக் கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஏ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து ஹல்தும்முல்ல பிரதேச செயலகத்தினால் உஸ்ஸல்ல வாராந்த சந்தை அபிவிருத்தி (மஹலந்த) செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்திற்காக 10 மி.மீ வலுவான இரும்பு கம்பிகள் மற்றும் 06 மி.மீ மிருதுவான இரும்புக் கம்பிகள் பயன்படுத்தப்பட்டு தூண்கள் மற்றும் பீம்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. கட்டிடங்கள் நிர்மாணக்

கையேட்டில் வலுவான மற்றும் மிருதுவான இரும்பு கம்பிகளிற்கான கொடுப்பனவிற்காக முறையே E-3 மற்றும் E-1 போன்ற இரண்டு விலைவீதங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. E-3 விலைவீதத்தை அடிப்படையாகக்கொண்டு 479 கிலோகிராம் இரும்புக் கம்பிகளிற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட தூண்கள் மற்றும் பீம்கள் உள்ளடங்கலான திட்டத்தின் பிரகாரம் வலுப்படுத்தும் நடவடிக்கைகளிற்கு தேவையான கம்பிகளின் அளவு 411.93 கிலோகிராம் ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், 67.07 கிலோகிராம் கம்பிகளிற்காக ரூபா 18,713 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி ஹல்தும்முல்ல பிரதேச செயலகத்தினால் வீதியை கொங்கிறீட் இடுகின்ற 23 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. வீதி கொங்கிறீட் இடப்பட்ட பின்னர் அதற்காக பயன்படுத்துவதற்கு தேவைப்பட்ட தண்ணீர் அந்த செயற்திட்டத்திற்கு அண்மையிலுள்ள இடங்களிலிருந்து இலகுவாக பெற்றுக்கொள்ள முடிந்திருந்த போதிலும் தண்ணீர் பயன்படுத்தப்பட்ட செயற்பாட்டிற்காக ரூபா 83,621 கூட்டுமொத்தம் செலவிடப்பட்டிருந்தது.

(ஒ) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி ஹாலிஎல பிரதேச செயலகத்தினால் 05 வீதி நிர்மாணித்தல் செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்தன. கொங்கிறீட் இடப்பட்ட வீதியின் இரண்டு பக்கங்களிற்கும் சீரான மேற்பரப்பு தேவைப்படாததனால் வீதியின் இரண்டு பக்கங்களிலும் பலகைகளை பொருத்துதல் மற்றும் பலகைகளை அகற்றுதல் வேலைக்காக ஆகக் குறைந்த கிரயத்துடன் SR–16 விலைவீதத்தை பயன்படுத்துவதற்குப் பதிலாக SR–15 விலைவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சதுர மீற்றரொன்றிற்கு ரூபா 60.30 விலைவீதப் படி ரூபா 12,878 கூட்டுமொத்தம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஓ) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி ஹாலி எல மற்றும் சொரணாதொட பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள பாடசாலைகளுடன் இணைந்து சிறுநீரக நோய்களைத் தடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு, பதுளை மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கிடையே நல்லதொரு ஒருங்கிணைப்பு, வழிகாட்டல், மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட முடிந்திருக்காததால் வைத்திய அமைச்சு மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடமிருந்து தேவைப்பட்ட ஆதரவு முறையாக பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையால், அந் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான செயற்திட்டங்கள் வெற்றியளித்திருக்காததுடன் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 9.46 மில்லியன் செலவினம் பயனற்றதாகியிருந்தது.

(ஔ) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி வெலிமட பிரதேச செயலகத்தினால் அப் பிரிவிலுள்ள பாடசாலைகளுடன் இணைந்து சிறுநீரக நோய்களை தடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 09 பாடசாலைகளில் தண்ணீர் தாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக தேவைப்பட்ட தண்ணீர் தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அத் தண்ணீர் தாங்கிகளிற்கான மதிப்பீடுகள் சந்தைப் பெறுமதியின் 10 சதவீதம் மற்றும் இலாபத்தின் 20 சதவீதத்தை சேர்ப்பதன் மூலம் தயாரிக்கப்பட்டிருந்தது. அவ் இலாபத்தை உள்ளடக்கிய மதிப்பீட்டுப் பெறுமதியில் கொடுப்பனவு செய்யப்பட்டதால் கொள்வனவு செய்யப்பட்ட தண்ணீர் தாங்கிகளிற்காக ரூபா 65,400 மேலதிக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(க) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி கந்தகெடிய பிரதேச செயலகத்தினால் பாடசாலைகளுடன் இணைந்து சிறுநீரக நோய்களை தடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அப் பிரிவிலுள்ள பாடசாலைகளினுள் தெரிவு செய்யப்பட்ட 14 பாடசாலைகளிற்காக 101 தண்ணீர் சுத்திகரிப்பு உபகரணத்தை பொருத்துவதற்காக ரூபா 2.69 மில்லியன் தொகையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க, 101 தண்ணீர் சுத்திகரிக்கும் உபகரணங்கள் 14 பாடசாலைகளில்/ நிறுவனங்களில் பொருத்தப்பட்டிருந்தன. மதிப்பீடுகளை தயாரிக்கும் போது விலைகளை பெற்றுக்கொண்ட செயன்முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து பஸ்ஸர பிரதேச செயலகத்தினால் பரகஹதென்ன கால்வாயின் தற்காப்புச் சுவரை நிர்மாணிக்கும் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது. 1:2:4 (மி.மீ. 19) கொங்கிறீட் கலவையுடன் (STI–46) மனித தொழிலாளரை பயன்படுத்தி கொங்கிறீட் வேலை நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் நிர்மாண மூலப்பொருட்கள் கையால் கொண்டுவரப்படும் என குறிப்பிட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. நிர்மாணத்தின் பிரிவொன்று மீது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது மூலப்பொருட்களை எடுத்துவருவதற்கு நுழைவுப் பாதைகள் காணப்பட்ட போதிலும் கைகளால் மூலப்பொருட்கள் எடுத்துவருவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது, அதற்கிணங்க, கைகளால் மூலப்பொருட்களை வழங்கும் வேலைக்காக ரூபா 42,316 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(கி) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் அடிப்படையில் பஸ்ஸர பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட நிர்மாணிப்பு செயற்திட்டத்திற்காக வாகனங்களை வாடகைக்கு பெறும் கிரயத்திற்காக இலாபத்தின் 20 சதவீதத்தை சேர்ப்பதன் மூலம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களிற்காக மதிப்பீடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளில் ரூபா 71,760 தொகை உரிய ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(கீ) உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாடுகளின் அடிப்படையில் வெலிமட பிரதேச செயலகத்தினால் பாலுகம நகரத்தின் நில செவண நிர்மாணச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அச் செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 30 இல் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் இணங்கியிருந்தார். 2018 பெப்ரவரி 19 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் அத் திகதி வரை 51 நாட்கள் காலப்பகுதி தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 50,847 தாமதக் கட்டணம் அறவிடுவதற்காக நடவடிக்கை எதுவும் பிரதேச செயலகத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) ஆயுர்வேத திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் அடிப்படையில் ஹல்தும்முல்ல பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட 4 செயற்திட்டங்களிற்காக ரூபா 189,478 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(கூ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் அடிப்படையில் சொரணாதொட பிரதேச செயலகத்தினால் நாத்தராவ வீதி மீள்நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்காக தேவைப்பட்ட 457(மிமீ) அளவிலான கியூம் குழாய்களிற்காக உயர்வான கிரயம் உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 55,508 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(கெ) மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 05 பிரதேச செயலகங்களால் மீளாய்வாண்டின் போது ரூபா 7.94 மில்லியன் கூட்டுத்தொகையான ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(கே) இலங்கை மகளிர் பணியகத்தின் நிதியேற்பாடுகளிலிருந்து சுழற்சிக் கடன்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கடன்களின் கடன் முறைமை ஒன்றை வெலிமட பிரதேச செயலகம் அமுல்ப்படுத்தியிருந்தது. ரூபா 2.12 மில்லியன் மீதியொன்று 2018 பெப்ரவரி 14 இல் அவற்றின் மீது பேணப்பட்ட வங்கிக் கணக்கில் காணப்பட்டது, 2017 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 33 கடன் விண்ணப்பங்களிற்காக கடன்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்காததால் அவற்றின் மீது கடன்கள் வழங்க முடிந்திருக்கவில்லை. இதனால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உரிய பணத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடிந்திருக்காதமை அவதானிக்கப்பட்டது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

பதுளை மாவட்ட செயலகத்திற்குரிய 27601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந் த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடி ய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 56.00 | 55.82 | 37.00 | 41.50 | 155.00 | 150.49 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### நிலுவையாக இருந்த கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 1.75 மில்லியனாக இருந்ததுடன் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 2.9 பொது வைப்புக் கணக்குகள்

பதுளை மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 211.54 மில்லியனாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 574,444 தொகையான 25 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1.15 மில்லியன் தொகை உரிய செயற்பாடுகளை நிறைவேற்றாது பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

**2.16 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இணைந்த சேவையின் உத்தியோகத்தர்களிற்கான வருடாந்த இடமாற்றக் கொள்கை | | |
| 2.2.2 மற்றும் 2.2.3 ஆம் பந்திகள் | - | சேவை நிலையமொன்றில் 05 வருடங்களை விடக் கூடுதலான சேவைக் காலத்தை பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் கட்டாயமாக இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். அவ் ஏற்பாடுகளிற்கு முரணாக 06 பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளிற்கு கூடுதலான காலம் சேவையில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றறிக்கை | | |
| (i) 2016 சனவரி 12 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.7 ஆம் பந்தி | - | 04 பிரதேச செயலகங்களால் பயனாளிகளின் இறப்பு தொடர்பான விபரங்கள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் அவர்கள் இறந்த பின்னரும் பயனாளிகளின் பிரதிநிதிகளால் படிகள் பெறப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ii) 2016 சனவரி 12 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.14 ஆம் பந்தி | - | முதியோர் படிகளை நீண்டகாலமாக பெற்றிருக்காத பயனாளிகள் தொடர்பான தகவல்கள் 03 பிரதேச செயலகங்களால் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. இதனால் படிகளிற்காக பதிவுசெய்து காத்திருக்கும் பயனாளிகள் நலனை பெற முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

(இ) ஓய்வூதியச் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | 2003 செப்தெம்பர் 25 ஆம் திகதிய 12/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | 12,988,630 | 07 பிரதேச செயலகங்களினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்வதற்காக உரிய ஓய்வூதியர்களிடமிருந்து அதிகமான தவணை எண்ணிக்கைகள் தீர்மானிக்கப்பட்டிருந்தன. |
| (ii) | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2007 மார்ச் 06 ஆம் திகதிய 05/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | 8,165,016 | ஓய்வூதிய மேலதிகக் கொடுப்பனவை அறவீடு செய்யும் போது 07 பிரதேச செயலகங்களால் தவணைக் கட்டணங்களாக தீர்மானிக்கப்பட முடிந்திருந்த நிதி எல்லையை விஞ்சி தவணைக் கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்தன. |

## 2.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளவாறான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 583.50 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவினம் ரூபா 487,876 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 53 | 42 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 32 | 23 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,063 | 973 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 145 | 133 | 11 |
| | **மொத்தம்** | **1,293** | **1,171** | **13** |